**OS.NO:06/2022.**

**DW 2 :** ஜானகிராமன்

நாள் : 25.11.2024

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

வழக்கு சொத்து, 1ம் பிரதிவாதி மகாலட்சுமிக்கு சொந்தமானது என்றால், சரிதான். வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் என்ன உறவுமுறை என்று எனக்கு தெரியாது. வாதியை எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியை எனக்கு தெரியும். வழக்கு சொத்தானது ஐடிஎப்சி வங்கியில் அடமானத்தில் உள்ளது என்றால், சரிதான். ஐடிஎப்சி வங்கியின் பழைய பெயர் கேப்பிட்டல் டைம் பைனான்ஸ் என்றால், சரிதான். 15.12.2021ல் நான், 1ம் பிரதிவாதியுடன் பதிவு அக்ரிமென்ட் போட்டேன். நான் பதிவு அக்ரிமென்ட் போடுவதற்கு முன்பு 1ம் பிரதிவாதி யாரிடமெல்லாம் அக்ரிமென்ட் போட்டிருந்தார், யாரிடமெல்லாம் கடன் வாங்கியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். அக்ரிமென்ட் போட்ட பிறகு, கிரைய பத்திரம் பதிவு செய்ய அழைத்த போதுதான் எனக்கு வாதி முதல் ஒப்பந்தம் போட்டது பற்றி எனக்கு அறிவிப்பு வந்தது. வாதி எவ்வளவு ரூபாய் முன்பணம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. ஐடிஎப்சி வங்கியின் கடன் கணக்கு பட்டியலை நான் வாங்கி பார்க்கவில்லை. ஐடிஎப்சி வங்கியில் 1ம் பிரதிவாதி வாங்கிய கடனுக்காக வாதி கடன் செலுத்திய விவரம் வங்கி கணக்கில் இருந்ததை நான் பார்த்தேனா என்றால், நான் அந்த வங்கி கணக்கை வாங்கி பார்க்கவில்லை. வாதிக்கு, 1ம் பிரதிவாதி 2019ம் ஆண்டிலேயே அக்ரிமென்ட் போட்ட விவரம் எனக்கு தற்போது தான் தெரியவந்தது. அந்த அக்ரிமென்டிற்காக வாதி ரொக்கமாக ரூ.50 ஆயிரமும், வங்கி வரைவோலை மூலம் ரூ.6,50,000/– முன்பணமாக

செலுத்தியுள்ளார் என்றால், எனக்கு அது தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு, வாதியிடம் போட்ட அக்ரிமெண்ட் ரத்தாகிவிட்டதாகவும், அதனால் எனக்கு ஒப்பந்தம் போட்டுள்ளதாகவும் 1ம் பிரதிவாதி, வாதிக்கு அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால், எனக்கு அது தெரியாது. 1ம் பிரதிவாதி வழக்கு சொத்து சம்மந்தமாக பல வில்லங்களை ஏற்படுத்தியுள்ளதால், வாதி முன்பணமாக கொடுத்த தொகையை பெற வேண்டிதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், எனக்கு அது தெரியாது. வாதிக்கு தாவா சொத்தின் மீது கிரைய முன்பணத்திற்காக பொறுப்பு உள்ளது என்றாலும், அதனால் வாதியின் கடனை பைசல் செய்யாமல், தாவா சொத்தை நான் கிரையம் வாங்கமுடியாது என்றால், அது சரியல்ல. வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் நடந்த பரிமாற்றங்கள் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தற்போது எதுவும் தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

S/d. M.Selvam,
I Additional District Judge,
Ranipet.